


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.01.2026) தலைமைச் செயலகத்தில், பதிவுத்துறையின் ஸ்டார் 3.0 திட்டத்தின் கீழ், காகிதமில்லா ஆவணப்பதிவு, நேரடி வருகையில்லா ஆவணப்பதிவு, தானியங்கி பத்திர உருவாக்கம், மறு விற்பனையாகும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு கட்டடக் களப்பணியின்றி ஆவணங்களை அன்றே திரும்ப வழங்கும் திட்டம், சொத்து தொடர்பான பரிவர்த்தனைகளை எளிய முறையில் வில்லங்கச்சான்றில் தேடுதல் உள்ளிட்ட 18 சேவைகள் உள்ளடக்கிய செயல் திட்டத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.1.2026) தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 16 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அதிநவீன உறை விந்து வங்கி, கால்நடை மருத்துவமனை, 4 கால்நடை மருந்தகங்கள், 2 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி நிலையம், இணை இயக்குநர் அலுவலகம், 2 ஒருங்கிணைந்த பண்ணைகள் மற்றும் தெருநாய்களுக்கான சிறப்பு கால்நடை மருத்துவ வளாகம் ஆகிய 12 கட்டடங்களை திறந்து வைத்து, 118 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 31 ஒருங்கிணைந்த கால்நடை பண்ணைகள் மற்றும் நவீன ஒருங்கிணைந்த இறைச்சி உற்பத்தி மற்றும் இறைச்சி பதப்படுத்தும் வளாகத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் ச.பா.அம்ரித் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.01.2026) தலைமைச் செயலகத்தில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சார்பில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இராஜீவ் காந்தி சாலை ஒக்கியம் மடுவில் புதியதாக கட்டப்பட்டுள்ள நான்கு வழி சாலைப்பாலத்தை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சிறப்பு முயற்சிகள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், போக்குவரத்து துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் எம். ஏ. சித்திக், மாநகர் போக்குவரத்து கழகம் மேலாண்மை இயக்குநர் டி.பிரபு சங்கர், ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.01.2026) தலைமைச் செயலகத்தில், சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம் சார்பில் 167 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தற்போதைய மந்தைவெளி பேருந்து பணிமனை மற்றும் முனையத்தில் ஒருங்கினைந்த பன்முக போக்குவரத்து மற்றும் வணிக வளாகத்திற்கான கட்டுமான பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சிறப்பு முயற்சிகள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், போக்குவரத்து துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் எம். ஏ. சித்திக், மாநகர் போக்குவரத்து கழகம் மேலாண்மை இயக்குநர் டி.பிரபு சங்கர், ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.1.2026) தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 126 இளநிலை உதவியாளர் மற்றும் 96 தட்டச்சர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் ச.பா.அம்ரித் ஆகியோர் உள்ளனர்.

## வெளிநாட்டில் பட்டமேற்படிப்பு பயில 10 சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு ரூ.3.60 கோடி கல்வி உதவித் தொகை

# 4 தொன்மையான - பழமை வாய்ந்த தேவாலயங்கள் புனரமைப்பு!

### ரூ.1 கோடியே 82 இலட்சம் காசோலை; தேவாலயப் பிரதிநிதிகளிடம் – முதல்வர் வழங்கினார்!

சென்னை, ஜன.23-

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.01.2026) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் வெளிநாட்டில் பட்டமேற்படிப்பு பயில 10 சிறுபான்மையின மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 10 சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு தலா 36 லட்சம் ரூபாய் கல்வி உதவித்தொகைக்கான ஆணைகளை வழங்கி னார். மேலும், 2 தொன்மையான தேவாலயங்கள் மற்றும் 2 பழைமை வாய்ந்த தேவாலயங்களை புனரமைப்ப தற்கு முதல் தவணைத் தொகையாக 1 கோடியே 81 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை தேவாலய பிரதிநிதிகளிடம் வழங்கினார்.**

**சிறுபான்மையின மாணவ, மாணவியர் வெளிநாடுகளில் பட்ட மேற்படிப்பு மேற்கொள்ள கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம்**

2025-26ஆம் ஆண்டிற்கான பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மானியக் கோரிக்கையில், சிறுபான்மையின மாணவ, மாணவியர் வெளிநாடுகளில் பட்ட மேற்படிப்பு மேற்கொள்ள ஏதுவாக ஆண்டுக்கு 10 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் கல்வி உதவித்தொகை வழங்கும் புதிய திட்டம் வகுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, வெளிநாட்டில் உயர்கல்வி மேற்கொள்ள 10 சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு 36 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 3.60 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்து 3.09.2025 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

அதன்படி, உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் முதுகலை பட்டப்படிப்பு பயில சேர்க்கைபெற்ற 10 சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு தலா 36 லட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் கல்வி உதவித்தொகைக்கான ஆணைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**தொன்மையான தேவாலயங்கள் மற்றும் பழைமை வாய்ந்த தேவாலயங்களை புனரமைத்திட மானிய உதவி அளிக்கும் திட்டம்**

100 வருடங்களுக்கு மேல் தொன்மையான கிறித்தவ தேவலாலயங்களை புனரமைக்கும் திட்டம் 2022-2023ஆம் ஆண்டு முதல் செயல்படுத் தப்பட்டு வருகிறது. அதன்படி, இதுவரை 13 தொன்மையான தேவாலயங்களை புனரமைப்பதற்காக 22.08 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், இன்றையதினம் திருவாரூர் மாவட்டம், பெரும்பண்ணையூர் புனித சூசையப்பர் தேவாலயம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் புனித யாக்கோப்பு தேவாலயம் ஆகிய இரண்டு தொன்மையான தேவாலயங்களை புனரமைத்திட 3 கோடியே 42 இலட்சத்து 53 ஆயிரத்து 270 ரூபாய் நிதி ஒப்பளிக்கப்பட்டு, முதல் தவணைத் தொகையாக 1 கோடியே 71 இலட்சத்து 26 ஆயிரத்து 635 ரூபாய்க்கான காசோலைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேவலாய பிரதிநிதிகளிடம் வழங்கினார்.

மேலும், பத்து ஆண்டுகளுக்கு மேல் செயல்பட்டு வரும் கிறித்தவ தேவாலயங்களை பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தலுக்கு மானியத்தொகை அளிக்கும் திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், பாப்பாக்குறிச்சி Zion IPA தேவாலயம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், காடம்பாடி இந்திய சுவிசேஷ திருச்சபை (ECI) ஆலயம் ஆகியவற்றை புனரமைத்து பழுதுபார்ப்பதற்காக 14 இலட்சத்து 27 ஆயிரத்து 686 ரூபாய் நிதி ஒப்பளிக்கப்பட்டு, முதல் தவணைத் தொகையாக 10 இலட்சத்து 70 ஆயிரத்து 765 ரூபாய்க்கான காசோலைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேவாலய பிரதிநிதிகளிடம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் எ. சரவணவேல்ராஜ், சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர் திருமதி. மு. ஆசியா மரியம், ஆகியோர் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் ஹைவேவிஸ் பேரூர் கழக நிர்வாகிகள் கூட்டம் தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. மற்றும் மகாராஜன் ஆகியோர் அறிவுறுத்தலின்படி ஹைவேவிஸ் பேரூர் கழக நிர்வாகிகள் கூட்டம் பேரூராட்சி கூட்ட அரங்கில் நடை பெற்றது. கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கம்பம் ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டி சிறப்புரை ஆற்றினார். ஹைவேவிஸ் பேரூர் அவைத் தலைவர் சண்முகம் தலைமை தாங்கினார். ஹைவேவிஸ் பேரூர் கழக செயலாளர் கணேசன் முன்னிலை வகித்தார். மற்றும் ஹைவேலிஸ் பேரூராட்சி மன்ற தலைவர் நித்திய பிரியா, பாலகிருஷ்ணன் மற்றும் துணைத் தலைவர் தரணி செந்தில் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

